# தேவனுக்காக காத்திருத்தல்

**நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம்போல் இருக்கும் (நீதி 13:12).**




நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், நாம் ஏதோ ஒரு எதிர்பார்ப்போடு சில காரியங்களுக்காக காத்திருக்கிறோம். சிறுபிள்ளைகள் தங்கள் படிப்பை குறித்தும், வாலிபர்கள் தங்கள் எதிர்காலத்தை குறித்தும், பெரியவர்கள் குடும்பத்தை குறித்தும் பொதுவாக சில எதிர்பார்ப்புகள் உள்ளவர்களாய் உள்ளனர். இன்னும் தனிப்பட்ட மனிதர்கள் தங்களின் வியாதிகள், பிரச்சனைகள் இவைகளில் இருந்தும் ஒரு விடுதலையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இவைகள் யாவும் உலக பிரகாரமான, மாம்ச சம்பந்தமான காத்திருக்குதல் ஆகும்.

இவற்றில் நாம் ஒரு விரும்பின முடிவை / பதிலை / விடுதலையை பெற்றுக்கொள்ளும் பொழுது நம் மனம் பெரும் மகிழ்ச்சி அடைகிறது. உதாரணமாக வறுமையின் மத்தியில் ஒரு தகுந்த வேலையை பெறுவது / நீண்ட நாள் வியாதியிலிருந்து விடுதலை பெறுவது / வெகுநாள் கழித்து ஒரு பிள்ளையை பெறுவது போன்ற காரியங்கள் மகிழ்ச்சியை தருகிறது. இதை அநுபவித்து பார்த்தவர்களுக்கே அது ஜீவ விருட்சம் போல் இருப்பது புரியும்.

ஆகிலும் இப்படிப்பட்ட பாதையின் வழியாய் கடந்து போகும்பொழுதே இவ்வுலக வாழ்க்கையின் எதார்த்ததை தேவன் நமக்கு புரியவைக்கிறார்.

இப்படிப்பட்ட காரியங்களில் இருந்து நாம் விடுபடும்பொழுது மிகுந்த மகிழ்ச்சி அடைவது மட்டுமின்றி, நம்மை தேவன் எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையும், எப்படி அற்புதமாய் நம்மை விடுவித்தார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட பாதையின் ஊடாய் கடந்து செல்லும் மற்றவருக்கும் தேவ அன்பினை அறிவிக்கும் சாட்சிகளாய் நாம் மாற்ற படுகிறோம். தேவன் சகலவற்றையும் அதின் அதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறார் என்பதையும், தேவன் சகலவற்றையும் நன்மையாகவே நம் வாழ்கையில் அனுமதிக்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம்.

இதனையே நாம் பரிசுத்த வேதாகமத்தில் ஆபிரகாம், யோசேப்பு ஆகியோரின் வாழ்க்கையில் காண்கிறோம். குறிப்பாக **ஆதி 50:19,20** வசனங்களில் யோசேப்பு தன் சகோதரர்களிடம் **"யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்"**, என்பதின் மூலம் தன் குடும்பத்தோடு சேர்த்து அநேக மக்களை பஞ்சத்தில் இருந்து காக்கும்படிக்கே தேவன் சகவற்றையும் தன் வாழ்வில் அனுமதித்தார் என்பதை உணர்ந்துகொண்டார்.

ஆனால் வசனம் சொல்கிறபடி நெடுங்காலமாய் காத்திருத்தல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். இதையே நாம் யோசேப்பின் வாழ்க்கையிலும் அவர் பின்வருமாறு கூறுவதிலிருந்து காணலாம் **"இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்" (ஆதி 40:14,15)**.

யோசேப்பு இவ்வாறு கூறினாலும் தேவன் நிச்சயமாகவே தன் வாழ்க்கையில் கிரியைச்செய்வார் என்ற விசுவாசத்தோடு அவசரப்படாமல் / குறுக்கு வழிகளை நாடாமல் தேவனுக்கு காத்திருந்தார். ஆதலால் ஏற்ற நேரத்தில் அதே பானபாத்திரகாரன் மூலம் தேவன் கிரியைச்செய்தார் (**ஆதி 41:9**). ஆனால் ஆபிரகாமின் வாழ்க்கையிலோ அவர் அவசரப்பட்டு சாராளின் சொல்லை கேட்டு செயல்பட்டார். ஆகிலும் தேவன் தமது ஆசிர்வாதத்தை சரியான நேரத்தில் ஆபிரகாமிற்கு கொடுத்தார். ஆனால்

ஆபிரகாமின் செயலால் ஆகார் மற்றும் இஸ்மவேலின் மூலமாக தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்ப்பட்டது. இன்றும் அது தொடர்கிறது.

நெடுநாள் காத்திருப்பதால் நமது இருதயம் சோர்ந்து போகலாம். நாம் வேதனைப்பட்டு கலங்கலாம். இன்னும் எத்தனை நாள் இந்த வேதனை என்று ஆண்டவரிடம் கூட மன்றாடலாம். ஆனால் ஒரு போதும் தேவ சித்ததிற்கு எதிராக, தேவன் காட்டாத வழிகளில் செயல்பட கூடாது. அதனால் ஏற்படும் நஷ்டம் நமது ஆசிர்வாதத்தை கூட பாதிக்கும்.

மேலும் ஆவிக்குரிய ரீதியிலும் காத்திருத்தல் காணப்படுகிறது. தேவனும் பாவியான ஒரு மனுஷனின் இருதய கதவை தட்டிக்கொண்டிருக்கிறார். என்றாவது ஒரு நாள் இந்த மனிதன் தனக்கு கதவை திறப்பான் என்றும், என்றாவது ஒரு நாள் நாம் கனிகொடுப்போம் என்றும் தேவன் பொறுமையாய் காத்திருக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தாம் செய்து முடித்த கிரியையின் பலனை இன்றும் எதிர்ப்பார்பவராய் நமது ஆண்டவர் இருக்கிறார். அதனாலேயே பாவியான ஒரு மனிதன் மனம் திரும்பும்பொழுது பரலோகத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது **(லூக் 15:7)**. மேலும் ஆண்டவர் கூறிய "மனந்திரும்பின மைந்தன்" உவமையிலும் நாம் இதனையே காண்கிறோம் **(லூக் 15 அதி)**. மேலும் **லூக் 19:10** கூறுகிறபடி இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார். இன்றும் அவர் ஆத்துமாக்களை தம் ஊழியர்கள் (நம்மூலம்) தேடிக்கொண்டிருக்கிறார்.

அதே நேரத்தில் நாமும் ஆண்டவருடைய வருகைக்காய் காத்திருக்கிறோம். மரணத்தின் மூலமாவது, மறுரூப மகிமையின் மூலமாவது நாம் ஆண்டவரை சந்திக்க காத்துக்கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே இது நடக்கும்பொழுது ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவை நாம் முழுமையாய் பெற்றுக்கொள்வோம். நமது ஆவிக்குரிய, சரீர சோர்வுகள் யாவும் அகன்றுபோகும். எனவே நாம் ஆண்டவருடைய வாஞ்சையை பூர்த்தி செய்து, அவரண்டை சேர்ந்து, கனிகளை கொடுத்து அவருடைய வருகைக்கு காத்திருக்கும்பொழுது, நிச்சயமாகவே அவர் நமக்காக வருவார். நம்மை தம்மண்டை சேர்த்துக்கொள்வார். எனவே இப்படிப்பட்ட மேன்மையான பாக்கியத்திற்கு காத்திருக்கும் நாம், இவ்வுலக காரியங்களிலும் அவரையே சார்ந்திருந்து அவருக்கே காத்திருப்போம். நிச்சயமாகவே முடிவு உண்டு; நம் நம்பிக்கை வீண் போகாது **(நீதி 23:18)**. ஏனெனில் **"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசா 40:31)**. ஆமென், அல்லேலூயா.